# மெஞ்ஞானச் சிந்து.

894.8111
2814

THOMPSON & CO., PRINTERS, MADRAS.

பிஸ்மில்லாஹிர் ரகுமானிர் ரஹீம்.

இஃது

நபி நாயக முஹம்மது சல்லல்லாகு

அலேகிவசல்லம் அவர்கள் பேரில்

# மெய்ஞ்ஞானச்சிந்து.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த

வீரவநல்லூர்-பீர். முகீய்யிதீன் புலவரவர்கள்

பாடியது.

மேற்படி நூலாசிரியராலேயே பார்வையிடப்பட்டு

சென்னையைச் சார்ந்த

ஜம்பூர் - கறர். டி. ரஹிமான்சாகிபவர்கள் குமாரர்,

ம-ா-ா-ஸ்ரீ,

சாப்ஜூ சாகிபவர்கள்

பொருளுதவியால்

சென்னை:

தாம்ஸன் கம்பேனி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1898.

[முதற் பதிப்பு. விலை. அணா - ௪.]

O-,88MMK4,A
M98

இந்நூலாசிரியர்

மே படி பிரபந்தத்தை யச்சிமாற்றிய

சரப்ஜூ சாகிபவர்களுக் கனுப்பிய

## சீட்டுக்கவிதை.

---

### பதினறடியாசிரியம்.

முத்தமிட்சலதி யுண்டிசைமினிக்கவி பொழியுமுகி லுலகெலாமகிழ்ந்து
வொய்த்தாசை கொண்டுவரு மாதங்கமிறகுன் முகம்மது வரப்ரசாத
முற்கண்ட தர்க்ககண்டன கண்டகோடாவிமுக்ய தத்வப்ரவாகம்
முடிமன்னருங் கூடவளவிடற் கரியவிலைமுதிரும் ப்ரகாசரத்னம்
பத்தியுடனே திருப்புகழ்சிந்து நபிபேரில்பாடிப் புகழ்ந்தசிங்கம்
பாவலவருங் காதலிக்கின்றபீர் முகைதீன் பாவலவரெழுதிய
பாசுரம் டீறயீமான்சாய்பு மகவெனுஞ்சாப்ஜூ சாய்பினிது பார்க்கப்
பாவாணர் மறையவர்கள் வறியவர்கள் மகிழவேபரிவினொடு கிதமுநல்கி
மெத்தவு மலங்காரமான ஆம்பூரொன்னு மேனகரிருந்து நாளு
மேதினியிலே தமது கீர்த்திநிலைநாட்டி யவிவேக வுத்தமசிலனே
விந்தையுடனெவ்வுலகு மெவ்வுயிரு மொளிவாய்விளங்கிய முகம்மது நபி
மேலானபத்மபத நாடியே நாம்சொன்ன மெய்ஞ்ஞான சித்தச்சிட
வுத்தமகுணத் தொடெவர் பொருளிதவி செய்குவாருமாமி
னெளவினவு கையிலில்
வுலகவர்களின்னையே தாரதம்மிய மறிந்துதவு தாதாவென்றன
ருண்மை நம்மவர்களி யாவர்க்கு நபிநாயகத்துவி வேண்டியதாகையா
லுள்ளக மகிழ்ந்துதவி செய்குவா யென்றைக்கு முனதுகுடி மிகவாழியே.

### கட்டளைக்கலித்துறை.

வாக்குமனமுமொன்றுயெம்மனோர்க்குநன் மாதர்க்கு
மார்க்கும்பயக்கும்பெரும்பா லுமா துலராணனத்தைப்
பார்க்குங்கொடுகருங்கைதூக்குமன்னோரயிப்பாரினின்று
கார்க்குமகிழ்ந்தென் றுஞ்சாப்ஜூசாய்பென்றொருகர்ப்பகமே.

பிஸ்மில்லா ஹிர்ரகுமா நிர்ரஹீம்.

# மெஞ்ஞானச் சிந்து.

நூல்.

மதியுற்றிலகு ஆங்கலகத்தைத் தென — விளங்கி
மௌனத்துறையமர்ந்த வாசனை — முதிர்
கவனப்பிரிய வன்பா நேசனை — யனு
மாசிலாதகன் மீனரீள் வெளி வானமாமுது தானமீ — தெழில்
மருவித்தின முறைந்த நாதனைப் — பல
சமயத்தினு முயர்ந்த — வேதனை.

குதாத்தருள் விரிந்த சமையத்துரு — வமைந்த
குணமொப்பறு நவங்கோ ளீசனை — சுரர்
கணமொய்த்தழ குறும்பிரகாசனை — யெழில்
கோதைமாமயி லாயிசாகதிசா விருேடபுசா — மனுயகி
குலவப்புளகெழுந்த வாகனை — யிசை
திலவப்புவி புரந்த — யோகனை.

விறுவுற்றிட வணங்கி யிதமுற்றதை — வகிர்ந்து
மிகுமற்புத நிகழ்ந்த நாதனை — நிசி
பகலற்றிட மிலங்கதீ தனை — மகி
வீரமாதர கோரமாணிதி யாசையாவு நிராசை — யாகிய
வீரதர்க்குதவு மின்பராஜனை — யருள்
வரதத்தெவரு முந்து — போசனை.

மதமற்றிட நினைக்தெ னிதையத்துற   வணங்கி
மௌனத்தெதிரில் வந்து தோணவே   யதை
யௌனத்தொடு மகிழ்ந்து காணவே   யகல்
வானுமாயக தாகியேசுபு காணியாகிய ஞான   .லோஜண
மகிமைப்பரன் மிகுந்தவாரமே   செய
வமையப் பணிவமிந்த   நேரமே.   (க)

வேறு.

அத்துவீதப்பொருள் காப்பா   நமக்
காதிமுகம்மதே காப்பர்   மிந்த
ஆலஞ்செக சாலம்படர் காலன் தொடர்   நேரங்கதி
யாமோ துயர்   போமோ.

கர்த்த வியமயமாகி   மின்ன
கண்டிதாகார்ணமாகி   என்றுங்
ககனத்தமரரு முக்கிய புவனத்தரிருரு   மெச்சிய
கர்த்தர் பிர   சித்தர்,

சித்தகிராமய மதுவே   வளர்
தேசோமயமுணா யெதுவே   பல
தினகாலையு மனமேயது தனையே துதியுனையே   கதி
சேர்க்கு நின்று   கார்க்கும்.

சுத்தசைச தன்னிய...   விற
சூலே சர்வாத்ம மெஞ்ஞான   மிந்தச்
சூட்சந்தெரியாச் சிந்தையே மோட்சந்தருவார்ச் சிந்தை செய
தூங்கியிருந்   தேங்கி.

பீற்றச்சடமலக் கூட்டைப்   புலப்
பேய்களடிபிடிக் காட்டை   நிதம

பேணிப்பல வூனுக்கென வீணெத்தனை நாணுற்றனை
பிணங்கியெங்கு மிணங்கி.

நாற்றங்கெட மணம்பூசி வரு
நாரியனை விசுவாசித் தென்று
நட்டார்குடி கெட்டோடிட் விட்டேயனு மொட்டாரொடு
நட்டாயையோ கெட்டாய்.

இன்றைக் கிருப்பதே பொய்யே யினி
என்றைக்கிருப்பது மெய்யே சொலலிங்
கீனப்படவே னிப்படி ஞானத்துயர் மோனத்தையு
மிழந்தா யெதுக் குழைந் தாய்.

மன்றலக மனுமெய்வாசர்க் கன்
மங்குல் குடையிடு நேசர் அந்த
ம்குழுதை நீ மிகவே துதியகமேகிடு மிக வூதிய
மனமே சொன்னே னினமே.

போதிக்கவந்த சற்குருவு மோன
பூமிக்குள்ளே வளர் கருவு முயர்
புகழ்மேவிய கயிநாயக மலதே துணை மனமே தனி
போற்றாய் புகழ்ந் தேற்றாய்.

யேதுக்குனக் கிந்தக் கேடு விட்
டிறஞ்சுன் மூகம்மதை காடு நெஞ்சே
யிடராகவே துடர்பாவமு மடாதது சுடர் போலவே
யிலங்கும் வந்து துலங்கும், (உ)

## வேறு.

புந்திமிசை தங்கிவளர் நாதா பல
ஜெந்துவினு மொன்றாகவ நீதா பரி
பூரணபஞ்சாட்சர வினோதா மகுமூதா தீனர்தாதா வாசம்
பொங்கியே பரிமளிக்கும் வேதா.

பந்தவினை யென்றகலு மோதா விந்தப்
பையலின் முன்னோர் புரிந்த தீதா நல்ல
பக்தியில்லாதார்கடத் துஞ்சூதா செய்த[illegible]காதாதீர்த்திடாதா விதைப்
பாவியோ டுளைத்திடவும் வாதா.

காணரிதாத் தோணும் விந்தை யுருவே யருள்
கர்ப்பகத்தினும் பெரிய தருவே யாருங்
காதலிக்க நாளும் வளர் திருவே யருவுருவே யுயர் மருவே விரி
காரணதே சோமய பொற் குருவே.

பேணியுமைக் காணவென்று நாடி மனம்
பேதலித்திருந்து முகம் வாடி யருள்
பெற்றவர்களோடு நிதங் கூடியுறவாடிக் கவிபாடி நின்றேன்
பேரொளி வெளிகளெல்லாந் தேடி.

வெள்ளம் வருமுன்ன மணைகோலி வையா
மெத்தன[illegible] பாலில் வா
மேலவவுமக்கு வெகுசோலியினி மேலிலெனின் மாலினின் றேன்
மேதினி சொல்லாதா வெனைக் கேலி.

கள்ளமனந் துள்ளுதென்ன மூட மெங்கு
கற்றது கொல்லோ வினோத பாட மின்னுங்

கண்டபடிபோடுதே பலவேட மூங்கள்பீடமேவிசேட மென்று
காதலில்லாம லிடுதென்ன தோடம்.

ஆச்சரியமாகிய ஓங்காரப் பிரண
வப்பதியினுட்புகுந்தோர் திரமோத
யார்க்குமரிதான பரதூர மதேசார மெந்தநேரம் வந்திங்
காள்வதோ வழியேனுந்தம் பாரம்.

தாட்சணியமான வுயர்சீல வாமி
னார்தபோலத்துவந்த பால வளர்
சத்துச் சித்தானந்தபலகோலா வருள்நாலா விதமாலா னேனிச்
சங்கட மெனக்கு மினி யேலா. (௩)

வேறு.

மங்குலாசி நிழ றங்கியே மதிணமக்காடு சுற்றுமே யுயர்
சொற்கவீடு முற்றுமே புகழ்
மன்னுவோர் கீ சற்றுமே யந்த
வள்ளல் பாதகினை யெள்ளலான பவம்
வந்திடா தகற் றுமே.

நங்கைமார் பொருளுமங்க மாமிருளுகாடிவாடி நிதமே எங்கு
மோடியாடி மதமே கொண்டு
நாசமாம் பலவிதமே யதை
நம்பியே வளர்க்கி லும்பா [illegible]க்கு
காளிலியாவர்

அன்னம்பாருமுயிர்ப் பொன்னம்பாவை யிவ
ரஞ்சுகத்தி னுயிலே கெடும்

பஞ்சாத்தின் குயிலே வள
ரம்பதும மயிலே நிர
மாவி சூனை கொளுஞ் சோபிதங்குலவு மாச்சரிய வெயிலே.

சின்ன நூலினிடை பொன்னமேரு குமிள்
செப்பரும்பு முலையே யயி
லொப்பறுங்கண் வலையே வாய்க்கென்
தேகமுற்றும் விலையே என்று
தேடி மங்கையனை நாடி லெங்ஙனுனை தீர்த்திடுங் கவலையே.

புந்திமேவிவளர் புந்திகாணரிய பூதனுத நபியே யனு
பூதி மீது கவியே சொல்லிப்
போற்றுனக் குநவியே யாகிப
புண்யமா யதுவுங் கண்யமோ டுதவும்
பொங்கமாம் பதவியே.

பந்தபாசம் வெறு மந்தகார மிதைப்
பார்க்குங்கால் பிரியமே யல்லா
லார்க்கு மேது நயமே யெங்கும்
பண்ணிவாழ்சின் மயமே நபி
பத்மபாதநினை வித்வமோடுமருளும் பாக்கியமான ஜெயமே.

சந[illegible] விந்தைவா யினடு
தங்க[illegible]தளே நீதர்
பங்கிலா[illegible]ள லோக
டம் பமியாவு மருளே யந்தத்
தாசிமா நபினை நேசமோடு பணிசார்ந்திடாதிங் கிருளே.

இந்த்ரசால வெகுதந்த்ர ஞாலசுக
மென்பயாவும் வஞ்சமே கொடுந்
துன்பமேவு நஞ்சமே யிதை
யெண்ணிடாதெ னெஞ்சமே நம்ம
னீசர் மாமதின வாசர்பாத நினையெய்ந்திடாது பஞ்சமே. (சு)

வேறு.

அணுக்கடொரு மில்கிந்தானே மன்னுதேனே மன
தாவலாகிதமேவிடும் பவம் யாவுமேது களா கிடும்படி
யாளாய் துயர் கேளாய்.

வணக்க முறைமையு மிப்போதே யுவந்தோதே கொடு
மாயமாகிய தீயவன்புவி நேயமே பெரிதாகினன் குறை
மாற்றாய் கடத் தேற்றாய்.

நயனத்திடை வெளியப்பாலே மின்னலபோலே யொளிர்
காதனே யகலாதிடம் படர்வேதமே மிகவே திடங்கொடு
நானே முன்னி னேனே.

சயனக்கன வெனவுந்தாயே யென்னுள் நீயே வரு
ஜாலமோ பெரிதாயினுக் தெரியாத காரணனே துலங் கரு
டாராயின்னற் ராய்.

வகதத்தெனு மமுதத்தேனே பெருமானே யெழில
வாசமான சரோச செஞ்சரணுசினேனினி யாகினும் தரு
வாயே மின்னு தாயே.

ககனத்தமரர் தொழப்பூவே வருகோவே னி
காணவே வரிதான சுந்தரதாணுவே பவமாசறும படி
காவே யென்னை யாவே.

தமசிற் கதிபதி சொற்போலே மண்ணின் மேலே மதி
தாமமாய் வரவே பிளக்தருள் சேமனேயுனே யாரறிந் தவா
தாமே யரி தாமே.

அமரர்க்கிறை யுறப்பின்னாலே விண்ணின் மேலே சென்றங்
காதியோடித ராசியம்பல பேசியே வரு நேசசுந்தர
வாயே நின்னை யீயே. (ரு)

வெறு.

மக்க நகர்வந்த நபிராசர் வள
மன்னுமதினா நகரவாசர் வெளி
மங்குலங் கவிகையிடுந் துங்கரிரு செஞ் சரண
மணமே தரு மனமே.

நெக்குருகியே யுருகி வாடி யென்று
நேடியிறகுலேயுற வாடி யின்ப
நிஷ்டைபுரிவா ருடைய கட்டை கடைத்தேறு மெனல்
நிசமே யவர் வசமே.

ஆலமுதலோன் கருணைபொங்கி யிச்சை
யானபொழு தானதிலே முங்கி யெரி
யங்கியின் மெழுகென வெடிங்கி நில்லுலக மய
லகலு நிசி பகலும்.

மூலமுத லாறுவளை தாண்டி மேலே
முட்டிநின்ற குண்டலியை வேண்டி யிந்த
மூன்றுலோகமு நிறைந்த தோன்றலே நினைந்திடதே
மோக்கந் திரு மேக்கம்.

பித்தனெனவே மயங்கி யீட்டி — யெங்கும்
பிச்சை யெடுத்தே கொணர்ந்து மூட்டி — வீணிற்
பெண்டுபிள்ளை என்பதிலே கண்டபலனேது — மனப்
பேயே யோது — நீயே.

நித்திரையிற் செத்தவிந்த மெய்யா — நிச
நில்லா தறியென்ற தென்ன பொய்யா — விட்டு
நெட்டிலே யலைந்தனை யிம்மட்டிலே யொதுங்கு — சொன்னே
னீதிவருஞ் — சோதி.

மோனமணி பெட்டகத் துள்வாழும் — யார்க்கு
முத்திதருங் காத்தனை யென்னாளு — நெஞ்சின்
முன்னுவாயே லுன்னையக்த நன்னய — குணலாருள்
மூடுமுற — வாடும.

வானகமனுர் விடுத்த தூது — வஞ்ச
வஞ்சியர்களென் றறிந்திடாது — அவா
மையலில விழுந்தவமே கையினி லிருந்ததும் — போய்
மருண்டாயென்று — மிருண்டாய்.

எண்ணிறந்த கோடிபலபாவஞ் — செய்தற்
கென்னை மறந்தாயேயெனக் கோபங் — கொண்டே
யீசனங்கு கேட்கயிலே மோசவிந்த — வாட்க்கையினுக்
கில்லா யென்ன — புகல்வாய்.

உண்ணிறைந்த பாவமறுத் தேகி — நம
துட்கலந்த சோதி யிலக்காகி — நீதா
னுற்றொரு மித்தாலொழிய வித்தகனைக் — காணவரி
துளமே சேரில் — வளமே.

அண்டபிண்டமாகி நின்றததுவே பல
வாச்சரியக் கூத்துகளு மதுவே வாலை
யம்பிகை மனோன்மணியு மும்பர்தொழு நாயகியு
மதுவே நஞ லதுவே.

கண்டபொரு ளத்தனையுமாகி யொன்றுங்
காணவரிதான துவு மாகி நின்ற
காரணத்தைத் துங்கபரி பூரணத்தைச் சிந்தனைசெய்
காண்பா யின்பம் பூண்பாய். (கூ)

வேறு.

கன்னலினு நன்னய சொலன்ன நடை மின்னொளி தொள்
காமர்மயி லாமினுவின் பாலரோ யுயர்
சேமமவிதோமறு சூனலரோ பல
காலைமாலை நினாலையேபுகல் வேலையாகிய சீலமேவிய
காதலன்கண்பாரு நீதபோதரோ நாடு
மீதலமுந் தேரும் வேத நாதரோ.

என்னவித மென்னுளொரு அன்னமிகு வன்னமோ
டிருந்திருந் தசைந்து நிதமாடுதே மாப
சுந்துடனுயர்ந் தாரகம் பாடுதே யெங்கு
மேககாயக மானநீவிரலாமலே தங்கீதாது முற்றினு
மேழையைக் கைதூக்கி யாளுமீரையா விந்தக்
கோழையைப்பி னுதரிப்பா ராரையா.

ஆருமங்கமூகிநின்ற வாசியொன்றியே விளங்கு
மாதியந்த கோர்நடுவி லாதவா வாச
மேவுமங்க நீளொளியி லாதவா தேடி
யாருமேயதியாத காரணசோதியே புண் ணாயினேனதி

யாறு மென்கொலோ புகல்வாரில்லையே ஞான
மேவுமன்பினோர் வளர்பூ வெல்லையே.

வீரதண்ட கோரசிங்க ரூபசண்ட னாரமர்ந்த
வேளையெந்த னுயிர்நும் பாரமே யெந்த
நாளு மென்கணே புரியுமவாரமே யுயர்
மேலவன் கருணாகரன் குணசாகரன் புலன்மேவிடும் பரன்
மெய்யுடைச் சந்தான்போதாட்சகா வான
மொய்யுடைச் சந்தான தான உட்சகா.

கானலை மானீரென வீணான மால்கொள் பாவனையேன்
கண்டபலனே தவமே பாவமே செய்தேன்
கொண்டகுண மோதுகிலோ கோபமே நாளுங்
காதலால் வடமீனனையு நாடினேனும தாசிலபே ரொளி
காணு மன்றொழியு மென்ப்ரதாபமே யெங்குந்
தோணநின் றொளிருகின்ற தீபமே.

நானெனு நீதானெனவே நானெனல்போய் நீயெனுமன்
னுள்வருங் கொல்லோவறியே னயினுஞ் சொல்லென்
னுள்வருமன் னுள்பிரியேன் தாயினு மிகு
நண்பனேயுனை நம்பினேனுயர்நம்பனேயிருகணகொளாவொளி
நாடுமெங்கணு நிறைந்தபூரணா நின்று
தேடு மன்பர்பா லிருந்த காரணா.

சொற்க நகரொக்க வொருமிதத் தெனுமக்க நகர்
தோன்றி யெங்கணுநிறைந்த தோன்றலே நீவிர்
வேண்டியென்டிறன் கண்முன்வந்து தோன்றலே யின்ப
துன்பசாகரமுங்கியே மயலந்தகார மிகுந்த பாவிசெய்

தோஷநாசமாக்குவாரிங் கில்லையே லோக
ஆசபாச மூற்கராளுந் தொல்லையே.

நற்குமறை சொற்றவிறையக்க நிறைதக்க பொருள்
காரணக்கட்வுளு நீரல்லவோ ஞான
பூரணக்குரு பானுமில்லவோ வளர்
கத்தனே பிரசித்தனே பரிசுத்தனே யருணித்தனே வெளி
கானநின் றுதோணும் விந்தை மெய்யனே வாச
மானுமங்க நானுமெங்குளே யனே.

கிட்டைப்புரி திட்டமு நீனிட்டமுமென் கிட்டவா
நித்தமு மென்னுவலென்னு சொல்லுவேன் ஸ்பயன்
முற்றிலுமுன் காவலெங்கு செல்லுவே னையோ
நின்னையேகதி நின்னையேபுக லென்னவேபுக ழென்னையே விட
னீதியன்றெங்கு நிறைந்த புண்ணியா நடு
வாதியந்தமுங் கடந்த கண்ணியா.

விட்ட துறை விட்டகலவெட்டவெளி யிட்ட நாத
வேதனென்றென் மீதிரக்கமாவனோ நல்ல
போதவந்தின்றே யுருக்கமேவனோ சொலலும்
வேணுகானமு நாணுமேழிசை தோணுமாமறை பேணுமாதவ
மெய்ச்சுடரினும் பெரும்பிரகாசனே யாதி
மூச்சுடரெனும் புனித வாசனே.

பெண்டுபிள்ளை என்ற சள்ளை கொண்ட கொள்ளை கண்டெ னுள்ளம்
பேதையைப்போ லேங்கிநொந்து வாடுதே சுழ
லூதையைப்போ னீங்கி யெங்குமோடுதே பறி

பீறிமேலெழும்வாளைநீள்வெளிமீனமோவெனவீழும்வாவி பல
பெருழில்கொள் ழாமதினவண்ணலே யெந்த
வோர்மையோடு நாகிலபத மெண்ணலே.

அண்டபிண்டமண்டலங்களொன்றொடொன்றியெங்கும்விந்தை
யாச்சரியக்கூத்து விளையாடியே பல
மாச்சரியத்தாக்குலையூடாடியே நீ செய்
யற்புதம்பெரி தொப்பறும்படி யெப்பவந்திரு பொற் பதந்தா
லன்னையே யென்தன்னையே கண்பாராயா யாள்வா
ருன்னையன்றி யென்னையே பின் பாராயா. (எ)

---

வேறு.

அவ்வலாகி யகதாகி வக
தாகி வாகிதுவுமாகி சம
தர்கிச்சூழ்ந்த திலேதாகிப்பாகி நெஞ்சே மோகி யுறவாகி.

செவ்விதான பிரகாசந் தேச
தேசமெங்கும்தன் வாச மந்தச்
சின்மயத்திலுறை புன்மயத்துவிதபாச முறுநாசப்.

மும்மலக்குறும்பைவென்று புல
மூற்கவேடனையுங் கொன்று விழி
மூடிப்பார்க்கிலுனை நாடிக்கார்க்குமதே யின்று படிறன்று.

இம்மியேனு முஸ்தபாவில் முங்கி.
யேத நீத்தவனை நாவில் புகழ்ந்
தியாருமே யுணாக்க நேருமோதிரத்தை யாவில் வளர்பூவில்.

காமனார் கபடத்தாண்டி          யிந்தக்
காதன்மாதர் நலமைத்தேண்டி          வந்து
கலைத்தபோது மனமலைத்திடாதே சொன்னேன் வேண்டி மெய்யைத்தண்டி

யெமனாடுக்கும் வேளை          யுனக்
கியாவரே கதிநீயேழை          நெஞ்சே
யிப்பவே துதிசெய் யொப்பிலா நபியின் தாளையறும்          பிழை.

இந்த வாட்கை நமக்குண்டு          முண்டென்
றெண்ணினோர் மடியக்கண்டும்          பின்னு
மென்னமாமயங்கிப் பின்னமானை பவமண்டும்படி          கொண்டும்.

சிந்தைகொந்த வலப்பட்டு          விந்தச்
செகத்தின் மாயைதனை விட்டு          நல்ல
சீர்மையாகி வெகு வோர்மையோடு மேலத்திட்டு யினியேட்டு. (௫)

வேறு.

மதினாட்கரெனப் பிறந்தமக்க          மாதவா
சந்ததமுந்தன் மீதவா          கொண்ட
மடையனென்றுனது புடையினின்றிடுவே          னுதவா.

இதையமுற்று நிறைபுதையலொத்த நின          தின்பமே
யடியவர் பேரின்பமே          யன்றி
யேவலாக லோகவாவல் கொண்டதெல்லாந்          துன்பமே.

காதன்மக்கண்மனைமாத ரொக்க வெகு          கஷ்டமே
பண்ணவுநாயே னிஷ்டமே          வைத்து
கத்தனை மறந்து மெத்தவே புரிந்தேன்          துஷ்டமே.

பாதகத்தையும் பொய்த்தோதகத்தையுங் கொள் பாவியே
யாயினுமென்னுள் மேவியே யருள்
பட்சமோடதுவே லெட்சங்கோடி யெந்த ஞவியே.

வெட்டவெளியிலேயோ விட்டுமறைவதென்ன விந்தையே
யெவரேதஞ்சமெந்தையே யென்னை
மேவிடா யேன்முற்றுமே யுலகுனைக்கு நிந்தையே.

கெட்டமடையர்களோ டிஷ்டமுடையே நுஙகள் கீர்த்தியே
பாடவு மனப்பூர்த்தியே பெறக்
கிட்டுமோ விதியுமொட்டுமோவறியேன் சீர்த்தியே.

ஆருமற்ற பரதேசி யொத்தவெனக் காரையா
வுதவிமுகம் பாரையா யேதுக்
கடிமைகொண்டதிந்த கொடுமையோனையுமே கூரையா.

ஆரமொய்த்த புபவீரமா நபிகட்க் காதியே
நிருவிகர்ப்ப சோதியே கூடி
யைந்துபூதமும் போர்னைந்திடப்புரிப தாதியே.

கண்ணும் விண்ணுமியாருமெண்ணு மெண்ணமுநுங் காட்சியே
யலதெவர் கையாட்சியே கொள்ளக்
கர்த்தரே யெவையுமெத்தவே வுளவத் தாட்சியே.

திண்ணமீறுகு பிர்வண்ணமாறவென்ற சிங்கமே
விலையொப்பில்லாத் தங்கமே யெந்தன்
தீமையாங்கடற்குமாமை யோங்கிதத்த வங்கமே. (௧௰)

## வேறு.

சித்த நிரத்தகண்ணாடிய ஆட்
டேடியுனை நிதம்வாடி யெந்தன்
சித்தமுமெத்த னொந்தேனே யெங்குந்
தித்தித்தொளிருஞ் செந்தேனே.

கர்த்தவிய மயத்தோனே யாருங்
காதலிக்கும் பெருமானே தேடி
யெத்தேச காலமுநானே யுனை
யேற்றிமிகப் புகழ்ந் தேனே.

தஞ்சநீயன்றி வேறிலையே நாளுந்
தாசனுனக்கே தாசன் விலையே யிந்தப்
பஞ்சையினோடென்ன வாதே யெந்தப்
பாதகர் சொன்ன சூதோதே.

வஞ்சியர் மோசத்திர்க்கஞ்சி மேலாம்
வள்ளலே யுன்னையே கெஞ்சி யாசை
மிஞ்சிப் புகழுமென்தனை யேகதி
மேவிடச்செய்வை யென் னனையே.

உள்ளக்கடலுக்கு மேலே சிர
சுச்சிக்கு நேரே கீழாலே நடு
தெள்ளித்தெளிந்தாடுஞ் சுடரே யென்று
தீர்த்தருள்வா யெந்த னிடரே.

எள்ளளவேனு மெஞ்ஞான மின்ன
தென்றறியேனை யஞ்ஞானத் திடம்

தள்ளிவிடன் முறையாமோ          நின்னைச்
சாரகான் கொண்ணசை          போமோ.

மாசில் பரவெளியூடே          வளர்
மான்மியமே பதவீடே          யெங்கள்
தாசிமெனும் கமதுவே          நிறை
தற்பரமே முகம்          மதுவே.

காசினி வாழ்க்கையு மருளே          யிதைக்
கண்டுமகிழ்வது மிருளே          திகழ்
வாசியினோடொளிர் பொருளே          யெந்த
வண்ணமு மெண்ணியெற்          கருளே. (௧௦)

வேறு.

வல்லணப்பசுங்கதிர்ச் சோதியே          துங்க
வள்ளல் நபிகளுக்காதியே          யெங்கு
மன்னிடப்புரந்திட்ட கியாதியே          துஷ்டன்
மதிமோசமோ டுலகாசையிலுழலாதொரு மனதாவி          வண்
வந்து சன்மார்க்க நன்னீதியே          யெந்தன்
சிந்தனை தீர்த்தென்றும்          போதியே.

பண்ணிருகா லொருவாசியே          மேலே
பாயுதருங் காலை வீசியே          யதன்
பட்சமெல்லா முக்ய நாசியே          நெஞ்சம்
பதராக தன்மிசையேறியுள் வெளியாமும தொளிகாண்          வழி
பட்சமுடனென்னை யேசியே          யேனு
முற்றுறையுமதே          யாசியே.

தேடற்கரும் பொருளானவா தேக
ஜீவனெல்லா முறவானவா வுன்னைத்
தேடியே நித்தமு நானவா கொண்டே
தேங்கித் தினமேங்கிப் புகழ்பாங்குக் கருள் காண்கர்க் குயர்
தேவனிடமுன்னம் போனவா சுடர்த்
தீபமெனு மழகானவா.

மூடப்பசாசமனமையே நின்று
மோசப்படுத்து மெனவையே யிந்த
மூர்த்த நிலைமையுமே பொய்யே ககன்
முகிலார் கவிணைகயினுர் நிருமலார மிறசூல் காலகளை
முன்னிச் செபதவமே செய்யே வரு
முத்திப் பதவியிதே மெய்யே.

கட்டுப்படாவச் சுமட்டமே காலைக்
கட்டவறிந்தவர்க் கிஷ்டமே யதோ
கண்டபடி பண்ணுந் துஷ்டமே கெட்ட
கடையேன் மறமடையேன் வசமுறவே யருள்புரிவீர் மதி
காதலிக்கு ஞானபட்டமே தர்தேன்
கன்மமெல்லாம் பண்ணுநஷ் டமே

யெட்டிப் பிடிக்கச் சந்தோஷமே யெனக்
கீசாவுன் பாதமெய் வாசமே லோக
மெங்கும் பரவ சன்னேசமே கொண்டிங்
கென்போலியதுன் போனையும் வம்போனையு மன் பாகவே
யீடேற்ற வந்தநும் பாசமேகொண் டேன்
வீடேற்றிடும் பிரகாச மே

செத்த பிணத்தொடு சேரவோ நல்ல
சித்தர் கணத்தொடு சாரவோ நிதந்
தேடிப்பணங்களை வாரவோ என்ன
செயுமோவிதிவை மோவுல குயுமோ மதிநயுமோ வுடல்
தேங்கித்துறவரத் தேரவோ மய்
னீங்கிப்பரவசத் தாரவோ.

கத்திக்கத்திப் பாவி நித்தமே யெங் குங்
கண்டபடி யிட்டுஞ் சத்தமே யொன் றுங்
காணலையே வஞ்சவத்தமே விட்டுக்
கருவோ டெழிலுருவாகிய குருவேயுமதிரு சீறடி
கைதொழுதான் மயற்பித்தமே நீங்கிக்
காட்சிபெறு மெந்தன் சித்தமே.

வாராதிருப்பதுங் கோபமோ விந்த
வஞ்சகனே செய்த பாபமோ வெந்த
மாபாதகரிட்ட சாபமோ என்றென்
மனமே பலதின மோகனன் மெழுகாகினது மதாசையின்
மையல்கொண்டேன் பரதாபமோ பெரி
தையோ வென்மீதேன்ன சோபமோ.

ஆரிருந்தென்ன வார்போ யென்னு வறி
னாகாரமோன மதியன்னு யுமை
யன்றியே லோகமயலின்னு வென்றிங்
கறியும்படி பிரியங்கொடு வுனாயும் பரனிட மன்புறு
மண்ணலே யெவ்வெனவையும் முன்னாள் வடி
வாகவே நின்ற துரை மன்னு.

போக்கு வரவற்ற காயமே தோன்றிப்
போவதுமோ பெருமாயமே யதைப்
போற்றுவதுஞ் சம்பிரதாயமே யுயர்
புகழ்மேவிய கிருபாகர நபியேயுமதிரு சீறடி
பூஷிதஞ் செய்யிலித்தேயமே எனைப்
போற்றியே கொள்ளுந்தன் னேயமே.

வாக்கி லமையாத ஞானமே பெற
வாய்க்குமப் பால்வந்து மோனமே மற்ற
மாற்கமெல்லா மெத்த வீனமே வஞ்ச
மடவார்கெடு முடலாசையும் விடமே யென வருள் வீரொனில்
வஞ்சகனேன் மதிப்பானமே யுண்டு
வந்திடுவே னுந்தன் தானமே.

காணற் கரும் பசுந்தங்கமே டையல்
கட்டை கடத்தேருந் துங்கமே புலக்
கள்ளர்களை வென்ற சிங்கமே பெருங்
கவலைக்கடல் தவிர்க்குடல் பதரித்திரி பனவத் தனி
காட்சிக் கரைசேர்க்கும் வங்கமே யென்று
கட்டோ டொழியுமென் பங்கமே.

பூணக் கிடையாதவாரமே பஞ்ச
பூதாதிக் கெட்டாத தூரமே வாழ்ந்து
பூரித்திருக்குநும் வாரமே யென்றும்
புகலாயுள் மகலாதழகுற வேதுதிதரு பாதகன்
பொங்க முடனிக்த நேரமே சொன்னேன்
பூர்த்தியாய்க் காப்பதுன் பாரமே.

வஞ்சிய ராசையைப் போக்கவோ புவி
மாயா மயக்கத்தை நீக்கவோ பாழ்
மனத்தைச் செபதபத் தாக்கவோ சொல்லு
மாலா லீலையாலா வெனநாலா விதமாகா மலே
வஸ்த்து வெனு முமைப் பார்க்கவோ கெட்ட
வாழ்வே நிலையென்று சேர்க்கவோ.

பஞ்ச புலவஞ்ச வேடரோ யாரும்
பார்க்கி லவர்குடி கேடரோ மெய்
பாக்கப் பரக்கவம் மூடரோ யின்பம்
படுதீயினி லெனேயே தளியுயிரொடுண நிதமே தொழில்
ப்ாவிகளுக் கென்ன ஆடரோ தந்தீர்
சோபித கர்த்தனின் சீடரோ. (கக)

வேறு.

ஆதிகர்த்தனுக் காதியாய் நமக்கன்பராய்வந்த நீதர் எங்கு
மண்ணலாமகு மூதர் வெகு
அற்புதஞ் செயுநாதர் தோற்று
மண்ட பிண்ட மடங்கவோ ரொளியாகி நின்றசு வேதர்.

தாதனைத் தளிதேர லுண்டுறை தாரணிந் தொளிர் வாகர் முக்ய
தத்வ வித்வ விவேகர் ஜீவ
சர்வ பூஷித பாகர் சரண
தன்னேயே நிதமுன்னியே தொழுந் தாசரோதுங்க யோகா.

என்னவே மறை சொன்ன நீதிவிட்டெடங்-கணுமுழன் றீட்டிபலர்க்
கின்ப வாரமுதூட்டி நாளு
மின்ப துன்பத்தின் மாட்டி கொண்டிங்
கீனமோடலேர் தாயெ னெஞ்சமே யேனுனக்கிந்தக் கோட்டி.

சின் மயப்பிரகாச நன்மய சிற் சுரூப வுலாசம் ஜீவ
சித்த காரண வாச மெங்குந்
தேடினும் பிரயாச மெந்தன்
சிந்தையே யந்த விந்தை நேசம் வைதீர்த்திடு மூந்தன் மோசம்.

வையம்பொய்யென் றுசெய்யவேதஞ்சொல்வாய்மையேநிசமாச்சே
யினி-வந்திடு முனக் கேச்சே யுள்ள
வண்ணமும் பழிப்பாச்சே யையோ
வஞ்சமே யங்கு நெஞ்சமே யிங்குவா வுனக்கென்ன பேச்சே.

தையலார்தருமையலால்வெந்துசாம்பலாணவர்கோடி கெட்டுத்
தனை மறந்தவர் கோடிபாரித்
தன்மை செஞ்சே நீவாடி யேவா
சாமகோசர தேசிகிருதா ணினைந்து நில்கேடி.

கர்ப்பகோடி யிருக்கினு மிக்கடமோபா ரனுத்தியமே யந்தக்
கர்த்தரொன்றே நித்தியமே லோக
காதலியாவும் பத்தியமே வைத்தே
காத்திமூல்வன்பியாவைஸ்தோத்திரிகாண்பைகாட்சிசத்தியமே.

தர்ப்பணத் துஞ்ஜலத்துமொன் றுளித்தன்மைபோனம்மூண் மேவி
நின்ற—தாசிமே நமக்காவி மற்றச்
சார்பெலாம் பச்சை நாவி நெஞ்சே
சந்ததமொளிர் பந்தமாமது தன்னின் மூழ்கியே சேவி. (கஉ)

வேறு.

ஊசிக்குணூலென—நாசிக்குமேலுகம்முள்ளுநிதமேவி—நின்ற
வுண்மைநபியைநீ வண்மைபெற நல்லுணர் உடனே சேவி.

O-,38 MHK4,A 119 15



கூசிக்குலாவு மடவாரைக்கெஞ்சிக்குலாவினையே நிதமேமாதர்
கோலமெல்லா மிந்த்ரஜாலங்க டோசியிற் கூரெவரோ சதமே.

ஆருக்குவந்த விருந்தென்றிராமலலமலைந்தே வருந்தி பெற்ற
வன்னை தந்தைமனைமக்களென்றெண்ணியலைந்தனையேபொருந்தி.

நாருக்குநல்லமண மலராலென்ற ஞாலமொழி சரியே யந்த
ஞாயத்தைப்போநபிரேயத்தைக்கொண்டிங்கேநண்ணினநாமறியே.

தேகாபிமானத் திரைகடந்தாலன்றித்தீரத்தெரியாதேதன்னைச்
சேர்ந்துறவாடிய மாந்தரைவிட்டுச் சிரிதும் பிரியாதே.

மோகாதி மோகத்தைவிட்டு நீயந்தமுகம்மறந்தயே நாடி வந்துன்
மோசத்தைநீக்கி நன்னேசத்துடன் தரு முத்திப்பத வீடே.

எத்தனைநாளிருந்தாலு முடிவிறப்பது சத்தியமே யெந்த
கெணமுதுமெண்ணிநீபுண்ணுகிறுகண்டதெல்லாமனுத்தியமே.

115618

சுத்தமயப்படிகச்சுயஞ்சோதிச்சுழிமுனைமேன்மனையேசென்று
சொக்கிமயக்குண் டிருக்கவுனைவந்து சூழாதிரு வினையே.

வந்தவழி யறியாதவ ரெந்தவழியறிந்தென் பலனே பெறு
வாருணா நீயிதை நேருணாயென்றே மதித்திடுவாய் புலனே.

சந்திர சூரியர் வாழ்மனைக்கூடே தயங்கிய வான்சுடரோ நிதந்
தஞ்சமென்றெண்ணியெ நெஞ்சே துதியுனைச்சார்ந்திடாதேயிடரோ.

வஞ்சப்ரபஞ்ச மயக்கமல்லாவிந்த வாழ்வேயொருநிலையோயெதோ
வாயைப்படைத்தவர் வல்லதைச்சொல்வார்மதியுமுனக்கிலையோ.

நெஞ்சத்திருந்து மறைந்தேசிறந்த நெடியநிராமயமே யந்த
நின்மலராசைவை புன்மல நீங்கியே நீபெறுவாய் ஜெயமே.(சரு)

வேறு.

ஹாசிமா குலத்திருந்த தாசிமா நிலத்தில் வந்த
காணரும் பெரும்புனித மாதவா கொண்டேன்
வாணரும்புகழுமுந்தன் மீதவா.

வாசியோடி வந்தரிய நாசிமே லியங்கி நின்ற
வள்ளலே மகிழ்ந்தருளிவ் வேளையே முற்று
மெள்ளலே நன்றல்லவே நா னேழையே.

தொல்லையறு நல்லறிஞர் சொல்லின்வழி மெல்லவெளி
தோன்றிய ஞானோதயப்ரகாசமே லோக
மூன்றினுங் கமழ்வதுன்றன் வாசமே.

எல்லையில்லை சொல்லரிய வல்லமையோ டெங்கணு
மிருந்துமறைந்தா யிதென்ன விந்தையே யென்
றிரஞ்சிமகிழ்வே னுனையா னெந்தையே.

வஸ்துமயமாய் நிறைந்த முஸ்தபா முகம்மதே சன்
மார்க்கமறியாதவமே பாவமே செய்த
மூர்க்கனெனையே கொளாதிர் கோபமே.

எத்தனையோ கற்றுமறிவற்றபாவி முற்றுமுனை
யேதுணைக்கொண்டே னிரங்கியாளய்யா மூன்று
வாதனைத்துன்போ பெரிய கோளய்யா.

உன்னையும் விவேகமில்லா வென்னையுமேயா னறிந்தா
லொன்றுமரிதே பெரிதிங்கில்லையே யுண்மை
யென்றுமறிவாய் தமியேன் சொல்லையே.

பொன்னேயே பெறவிரும்பி யுன்னேயே மறந்திடு மென்
புந்திபோலுமே பகையின் றன்னேயே கண்டா
லெந்தநாடு மேயிகழு மென்னேயே.

மோனமணித் தாயருளு ஞானமணித் தீபமேயென்
முன்னேவினே யென்றகலு மோதய்யா விந்தச்
சின்னவனே டேயிதென்ன வாதய்யா.

மானமில்லா மூடநெஞ்ச யீனமடவார்கள் வஞ்ச
மாயைவலைப் பட்டவென்னே யாளுமே யுயர்
காயகிலைச் சிட்டரேயென் ஞளுமே. (கச)

வேறு

துங்கமா மதினந்தனின் மேவிய
தூயமெய்ஞ்ஞான விலாசர் கொடு
மாயவின்னுமையர் நேசர் பெருந்
துறவின்றுறை யினிலேகிய வறநன்கமை தருமாதவ
சுத்ததாசர் பவத்தையெலா நிர்த்
தூகள்படுத்தும் பிரகாசர் மெய்ப்
புகழ்ப்படுக்குஞ் ஜெகதீசர்.

சங்கையாய் நம தங்க மூலாவிய
சற்குண சாந்தவுல்லாசர் யெங்கு
நிற்குமனேகா வாசர் திகழ்
சரணந்தவ றிடவேயொரு மரணங்குருகிடு போதது
தன்னோகாவுநீ யென்னேகொலோ மறந்
தாயேமட மனப்பேயே பவத்
தீயேசுட வளர்த் தாயே.

பந்தபாச மீதென்றுண  ராதேதோ
பாக்கிய மென்றுறவாடி  நல்ல
யோக்கியம் வந்திடநாடி  நித்தம்
பவசாகரமே மூங்கி நீதவசேகரமே  மங்கினை
பார்த்தயாவரும் வார்த்தைசொல்வா  ரையோ
பல்விதங்கற்றவெ னெஞ்சே  யினிச்
சொல்வித முற்றுணர்ந்  தஞ்சே.

எந்தவேலையு நாநாநென்றே  செய்
தினந்தெரி யாதலைந்தாயே  தந்த
னம்பெரிதா மலைந்தாயே  நம
திடை பிங்கலை யிடைதங்கிய நடைகண்டொளி  படரும்படி
யின்னணந் தவம் பண்ணு  திருந்தனை
யெண்ணமே யென்ன உன் மூட  நல்ல
வண்ணமே நீகொள்  சந்தோடம்.

அண்டகோடி யிம்மண்டல  மந்தி
யனைத்துயிரு மதனொளி  வேநீ
நினைத்துணரு முயர் தெளிவே  பல
வறிவாகரமாய் நின்றிடு குருவா மிறசூல்  செஞ்சர
ணன்பினொடு பணிந்தவரோ  யுய
ராச்சரிய பதயோகர்  மன
மாச்சரிய மகல்  வாகர்.

கண்ட யாவுங்கனு வெனவே  சொன்ன
காரணதேசிக ருனாயே  பரி
பூரணமானநன் மறையே  யென்று
கருதாதுடை யுடையென்னவே பொருதாய்பவ மதுதுன்னவே

கல்லெலாகிக ரல்லவிவன் மனக்
கல்லெனவேவஞ்சை கூர நின்றாய்
மெல்லெனவே நகை சேர.

வஞ்சமே குடிகொண்ட மட மன
மாதர்மயக்கினில் வீழ்ந்து மிகு
காதன்முயக்கவே தாழ்ந்து திரி
மனமேயிது நன்றல்லவே யினசொன தொன்றல்ல நீ
மாறிமாறி வாயூறியுமே யவ்
வழியே திரிவதுஞ்சரியா பின்
பழியேவருவது மறியா.

தஞ்சனானநபி யிறசூலே ச
தானந்தமோன நன்னிலையே நற்ப
தானந்த வேறெது மிலையே யினித்
தடையின்றினடைகொண்டுளமிடையுந்தொறுமிகுமன் பொடு
சார்ந்துமே களிகூர்ந்து வெளிவளர்
தன்மையு மன்னதே ஞேக்கே யிதே
நன்மையதாகிய வாக்கே.(கரு)

வேறு.

திருமதினாவினு மக்கத்து மிந்தச்
ஜெகமாதிவானினுஞ் சொற்கத்தும் துன்னி
திரவசர சரநாளுமே தங்கி
நின்பதுவே யென்னை யாளுமே.

குருவாகி யுருவாகியருவாகிப் பல
கோலமுமாகி யென்னுள்ளாகி வளர்

கருவினுங்கருவாகி நின்றதே கடைக்
கண்ணேணுக்கவென்பாவஞ் சென்றதே.

திடசித்த வைராக்ய நல்லவர் ஞானச்
செல்வத்தைக் கைக்கொள்ளும் வல்லவர் மற்ற
கெடுபுத்தியோர் முகஞ்சம்பியே யென்ன
கெதிபெறுவார் வீழ்வர் கும்பியே.

கடைகெட்ட நாயினுங் கடைகெட்ட மோசக்
கன்மத்திலுழல்கின்ற படுதுஷ்ட ருயி
ருடல் விட்டையோ வென்றுமாளையி லவர்க்
குதவிபெவரந்த நாளையில்.

இரவுபகலற்ற திதையமே மார்க்க
விறசூன் கம்மதங்குதையே யென்று
குருபரன் சொன்னதே சத்தியங் கண்ட
கோலமெல்லாம் பொய்யனுத் தியம்.

மருவுமலரும்போ லொன்றியே நின்ற
மகிமை காணுருளங் கன்றியே மேலாம்
பாமபதவிக் காளாகிடா ருயர்
பார்த்திபன்முன் மகிழ்க்தேகி டார்.

சிகரத்துன்முன் தகாமரத்தினு மெத்தச்
சிறந்த வெக்கீன் மாச்சிரத்தினு நாளுங்
குதாத்தினெடு வாழ்ந்த தோகையே யென்று
கொள்ளும் அடியன் மீதோகையே.

இதையத்தை யின்னதென் றறியாத வெந்த
னிதையத்தை விட்டனும் பிரியாத நபி
யிதையத்தின் மகிமையை யாவரோ சொல்ல
யேலுமதைக் காணூர் காபரே. (கசூ)

வேறு.

வேதாகமம்படித்து வாதாகமந் துடைத்த
விதரணவுத்தமர் துதிசெய்மகத்துவ மெய்யனே நிதம்
வியனுலகத்தவர் பரவியபொற்பத வையனே.

நாதாந்தசுத்தமனே மீதாந்தலத்தி லுறை
நவிலருமற்புத விகஜிதமுக்கிய நாயகா வள
னலனுடைமக்கள நகரமரசற்குண தாயகா.

அம்பார்விழிப்படையெய் பெண்பான்மயற்படு மென்
னவசரதுட்சணமதியவலட்சண மானதே யுள்ள
வருமைமுதற்பல பெருமைமெலத்தனி போனதே.

உன்பாதமேகெதியென் புன்பாவமாதிய துன்
பொடுகவலைத்துய ரகல்வது மெப்பொழுதோதையா மைய
லுடையவெனக்கெனி லருளவுனக்கெனவா றையா.

விம்பப்படப்படர்ந்த ரும்பொற்பெனக்கிடந் தென்
விழிநடுவிற்பளி ரெனவொளிர்சிற்பர மேலவா விந்த
விடையமனுத்திய மெனவறியெற்குநின் மேலவா.

சம்பத்தினிற்சிறந்த சம்பத்தெனத்தெரிந் துன்
தனைநினைவுற்றிது தினமுமயற்கொடு தயங்கினேன் வரு
ததியிதெனத்தெரி இலவெனயெய்ப்பொடு தியங்கினேன்.

முப்பாழ்மூடிக் கிணையே யப்பாழ்விடிங் கினியான்
முறைமுறையெப்போழு தெதிர்தெரிசிப்பது முந்தனே யுயிர்
முதலியபற்பல வசரமுமுற்றெருளிர் கர்த்தனே.

யிப்பார்முதற்பலது மொப்போதுதற்கரு மூன்
னிணையடிபெற்றிடி லெனைநிகரொப்பவரில்லையே யுல
கிதமகிதத்தலை வதுமொருமுக்கிய தொல்லையே.

ஆசாபசாசெனுளத் தூசாடியே கெடுத்த
தநுதவிரத்தின மிடியும்வருந்தின தன்னையே யெந்த
வறிவொடுனைத்தனி முதிரகினைப்பது பின்னையே.

தேசோமயச்சொருப வீசாவுனைத் தவிரச்
சிறுமையகற்றுண நிலையெளதுட்குறை தீராயா வொளிர்
திருமதினப்பதி வளரொமதத்தனே காராயா. (எ)

வேறு.

நேம நிஷ்டைபுரிவோர்க் கருளு நவநீதனை
யதிதீதனா நிறைபோதனை யென்று
நித்தியானந்த வேதாந்த மெற்கருள் விநோதனா.

காமமொப்பின் மகுமூதவேதனையே நாடுதே
நிதந்தேடுதே முகம்வாடுதே சிந்தை
கைந்தகண்ட வெளியெங்கணுங் குலவி யோடுதே.

சங்கையின்றி யிபுலீசெனுங்கடுவாய் சாடுதே
யிருள்மூடுதே விணைகூடுதே யெங்கள்
தாசிமாசயிவை நேசமோடெண்ணுள்ள நாடுதே.

வெங்கையாதபனெனச் சனங்கள் பகை மீறுதே
வசைகூறுதே பழிசேருதே யெந்த
வேளையுங்ககனமாரிபோல கண்ணீர் சோருதே.

பூத்தமுண்டகப் புதுமலரினனு பூதியே
படர்சோதியே யதேயாதியே நாயேன்
பொன்றிடாமுனேயோ வென்று தோன்றும் வெளி வீதியே.

ஊத்தை மேவுமிந்த நாற்றமெய்யிலெங்கு மோட்டையே
கொண்டகோட்டையே மனப்பூட்டையே யுடைத்
தூன்றியே புகுதத்தோன்றலேயே யதன் பாட்டையே.

செகத சற்குரு முகம்மதென்ற சிற்சு ரூபமே
சுடர்த்தீபமே யையோ கோபமே கொண்டாற்
நீருமோவெனத கோரமான பா தாபமே.

சுகிர்தமொட்டேபவம் விகிர்தமான பல தொல்லையே
யெனுமல்லேயே தீர்த்தவெல்லேயே கொண்டு
சூட்டுமோவிதியென் மாட்டுமே தெரிய வில்லேயே. (கஅ)

வேறு.

சீர்மதிநா கர்வாசர் துங்கராஜ ரன்பர்நேசர் வளர்
திவ்ய மெஞ்ஞானப் பிரகாசர் நல்ல
செம்பொற்பத மிம்பர்க்கரு ணம்பர்க்குயர் சப்பத்தெது
செப்பகமே பிரிந்தாயே வெகு தப்பிதமே புரிந்தாயே.

கூர்குண சாந்தமற்றுயே மனப்பேயே சினத் தீயே குடி
கொண்டிடவே வளர்த்தாயே யட
கொஞ்சத்தனமட நெஞ்சமே துஞ்சற்றினமேவர் தஞ்சமே.
கூற்ற உபாதையை நீக்கும் வந்து தோற்றி யெதேகதிசேர்க்கும்.

பொன்னம்பொருப்பெனவீங்கிப்புடைத்தோங்கிக்கலன்தாங்கிவளர்
பூவையரின் தனத்தேங்கி யவர்
புண்ணும் படுகுழி முங்கியே யண்ணூந் துடலொழி மங்கியே
புத்திகெட்டே னலைந்தாயே நல்ல பத்திவிட்டேயுலைந் தாயே.

சொன்னமலை மலைபோலுந் தேடினாலும் பெரும்பாலும் மாசை
தோன்றிடும் பின்னு மென்மேலும் அதன்
துன்பம் பெரிதே நெஞ்சமே யின்பஞ் சிறிதாம் வஞ்சமே
சொன்னே னிசம்பின் னிடாதே மிடிசூழினுமேமுன்னிடாதே.

சித்தநிறஞ்சனமாகி நின்றதே கிதனையூகித் துயர்
செல்வம் பொழிந்திடமோகி நம்மள்
சித்தாகுல மந்தோர்வென னைந்தோடுமெ னெஞ்சே யிதே
செவ்வியரோகிய பாதை நட தீர்ந்திடுமே யுந்தன் வாதை.

வித்தகனாய் வந்தசோதி சொன்னநீதி யெனுஞ் சேதி தனை
விட்டலைந்தா யென்னபூதி யினி
மேலாகினு நாலாவித மாகாதிற சூல் நாயக
மெய்ச்சுரூபத்தையே நாடுவரு மேலைக் குனக்கரும் வீடு.

பாவிப் பிணங்களைப் பாடித் துதித்தாடிப் பணந்தேடி யென்ன
பாக்கியம் பெற்றனை வாடி யினிப்
பண்பாயி வணான் பாய்வரு நண்பார் நபி தண்சேர் புகழ்
பாடியருள் பெறகில்லை யிதே கோடி பொருள்பெருஞ்சொல்லை.

ஆவிக்கருந்துணையான திவ்ய ஞான விந்தைமோன வின்ப
மத்தனையு மறந்தினை மிகு
மவனிபபடழான் முங்கியே கவனத்துடனுழல் கின்றனை
ஐயோவி தென்னபொல்லாங்கே யெவராதரிப்பாருனை யீங்கே; (கக)

வேறு.

சிந்தையி லிலங்கிய நாதா சுந்தரமுக சந்திர னிகர்
செப்பரிய வற்புதவேதா படர்
சிந்தைவாதை மிகுந்த தாருனை நிந்தையோ பெரிதெந்தையே வரு
திவ்யநெறி தோன்ற வில்லையேமடிந்தவரோ டொழிந்திடாமுன்
செய்யவையருள் வந்தே நொல்லையே.

முந்தைவினை வந்தெனனையே நிதமயக்கி யுனைமறக்க
முற்றும்வஞ்சஞ் செய்ததெனையே வனை
மொய்ம்பனேயுனை நம்பினேனுயர் தம்பிரானெனவிம்பர்மேவிய
மோனமணிப் பேழைநிதியே யின்னமுமென்ன சின்னமுமன்ன
மோசஞ்செய்யு மோவென் விதியே.

வஞ்சியர்செய் மோசங் கொஞ்சமே யதினுமெந்த நினைசுனஞ்சிசெய்
வஞ்சமோ மிகுந்த நஞ்சமே மெய்ந்த
வண்ணமோடுனை யெண்ணியேயிந்த நண்ணுமாறுனையண்ணலாகிய
வள்ளலேயென் னுள்ளங் களிப்பாய் விளங்கிட முன் சளங்கெடவே
வந்தருளு வந்தென் றக்ஷிப்பாய்.

தொந்தியே நிரம்பவிரும்பி யுலகமெங்கு மீதமலைந்த
தொந்தனையா நெஞ்ச மரும்பி யொன்றுந்
தோன்றிடாதடியேன்படுந்துயர்தோன்றலேபெரிதேதிடங்கொடு
சொன்னமலைபோ லென்முன்னமே வன்னமாய்வர வன்னையேயிறை
சொல்லலையோ நும்பா வின்னமே.

விந்தையுடனெந்த வுலகும் நிரவசர சரமுழுது
மெல்லென வுலவி யிலகு நுந்தம்
விஞ்சையோபெரி தஞ்சிகாளு மிரஞ்சியேதனி கெஞ்சு மாதவ
மெய்யடியாருள்ள விளக்கே முகம்மதென்ற தகமை கொண்ட
மேலவ நின்றென்னை விளக்கே.(௨௦)

115618